**தூத்துக்குடி மாவட்டத்திற்கான வேளாண் வானிலை ஆலோசனை அறிக்கை**

**(அக்டோபர் 27-ம் தேதி முதல் நவம்பர் 1-ம் தேதி வரை)**

**(வெளியீடு: வேளாண் வானிலை ஆலோசனை மையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவில்பட்டி மற்றும் இந்திய வானிலை துறை)**

**முந்தைய வார வானிலை (23.10.15- 26.10.15)**

| | |
|---|---|
| மழை (மி.மீ.) | 17.9 |
| அதிக பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 29- 32 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 24- 26 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 7- 8 |
| ஈரப்பதம் (08:30 மணி) (சதவீதம்) | 86- 94 |
| ஈரப்பதம் (17:30 மணி) (சதவீதம்) | 72- 90 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) | 7- 17 |
| காற்றின் திசை | 70- 160 |

**1.11.15 அன்று 08:30 மணியுடன் முடிவடையும் காலத்திற்கான வானிலை முன்னறிவிப்பு**

| **வானிலை காரணிகள்** | **வானிலை முன்னறிவிப்பு** | | | | |
|---|---|---|---|---|---|
| | **நாள் 1 28.10.15** | **நாள் 2 29.10.15** | **நாள் 3 30.10.15** | **நாள் 4 31.10.15** | **நாள் 5 1.11.15** |
| மழை (மி.மீ.) | 8 | 10 | 19 | 25 | 25 |
| அதிகபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 30 | 30 | 30 | 30 | 30 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 25 | 25 | 25 | 25 | 25 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 7 | 7 | 7 | 7 | 7 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 85- 92 | 85- 92 | 85- 92 | 85- 92 | 85- 92 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) மற்றும் திசை | 16/ கிழக்கு | 16/ கிழக்கு | 16/ கிழக்கு | 16/ கிழக்கு | 16/ கிழக்கு |

வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் அதிகமான மேகமூட்டம், மிதமான மழை மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலைக்கேற்ற வேளாண் வானிலை ஆலோசனைகள்

| பயிர் / சாகுபடி சூழல் | பருவம் / சாகுபடி செயல்கள் | வேளாண் வானிலை ஆலோசனை |
|---|---|---|
| நெல் | நாற்று பருவம் | வரும் தினங்களில் மழை எதிர்பார்க்கப்படுவதால் நெற்பயிருக்கு நீர்ப்பாசனம் செய்வதை தவிர்த்து வயலில் போதிய வடிகால் வசதி செய்யவும். களைகளை மண்ணுள் அழுத்தி மண்ணில் காற்றோட்டத்தை மேம்படுத்த கோனோவீடர் களைக்கருவியை 7- 10 நாட்கள் இடைவெளியில் பயிர் வரிசைகளுக்கு குறுக்கும் நெடுக்குமாக பயன்படுத்தவும். நெற்பயிருக்கு அருகிலுள்ள களைகளை கைக்களை எடுத்து அகற்றவும். |
| பருத்தி, சோளம், மக்காச்சோளம் மற்றும் பயறுவகைகள் | வளர்ச்சி பருவம் | மானாவாரி பயிர்களில் களைகளால் ஏற்படும் போட்டியை தவிர்க்கும் வகையில் களைகளை அகற்றவும். மண்ணின் ஈரப்பதம் சரியான பக்குவத்தில் இருக்கும்போது களையெடுக்கும் கருவியை பயன்படுத்தவும். |
| | | வரும் தினங்களில் மழை எதிர்பார்க்கப்படுவதால் மானாவாரி பயிர்களில் சரியான பயிர் எண்ணிக்கையை பராமரிக்கும்விதத்தில் அதிகப்படியான பயிர்களை களையவும். |
| | | வரும் தினங்களில் மழை எதிர்பார்க்கப்படுவதால் வயலில் நீர் தேங்குவதை தவிர்க்க மானாவாரி பயிர்களுக்கு போதிய வடிகால் வசதி செய்யவும். |
| சூரியகாந்தி, கம்பு | விதைத்தல் | வரும் தினங்களில் மழை எதிர்பார்க்கப்படுவதால் மானாவாரியில் கம்பு மற்றும் சூரியகாந்தி ஆகிய பயிர்களை விதைப்பு செய்யவும். கம்பு மற்றும் சூரியகாந்தி இரகங்களுக்கு 45 x 15 செ.மீ. என்ற அளவிலும் வீரிய ஒட்டு இரக கம்புக்கு 45 x 15 செ.மீ. மற்றும் சூரியகாந்திக்கு 60 x 25 செ.மீ. என்ற அளவிலும் இடைவெளியை பின்பற்றவும். |
| மிளகாய் | நாற்று பருவம் | தற்பொழுது எதிர்பார்க்கப்படும் மழையால் வயலில் நீர்தேங்கி மிளகாயில் நாற்றழுகல் நோய் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. இதனை கட்டுப்படுத்த கார்பன்டசிம் 0.1 சத கரைசலை மண்ணில் ஊற்றவும். வயலில் போதிய வடிகால் வசதி செய்யவும்.<br><br>தற்பொழுது நிலவும் அதிகமான மேகமூட்டம் மற்றும் ஈரப்பதம் கொண்ட வானிலையில் மிளகாயில் இலைப்பேனின் தாக்குதல் காணப்படுகிறது. இதனை கட்டுப்படுத்த டைமெத்தோயேட் 2 மி.லி./ லிட்டர் அல்லது மீத்தைல் டெமட்டான் 2 மி.லி./ லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். அந்தந்த பகுதியில் நிலவும் வானிலையை கருத்தில்கொண்டு மழையில்லாத சமயங்களில் மருந்து தெளிக்கவும். |

| | | |
|---|---|---|
| பாசிப்பயறு மற்றும் உளுந்து | வளர்ச்சி பருவம் | தற்பொழுது நிலவும் அதிகமான மேகமூட்டம் மற்றும் ஈரப்பதம் கொண்ட வானிலையில் பாசிப்பயறு மற்றும் உளுந்து பயிர்களில் காணப்படும் இலைப்புள்ளி நோயை கட்டுப்படுத்த கார்பன்டசிம் 1 கிராம்/ லிட்டர் அல்லது மாங்கோசெப் 2 கிராம்/ லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். அந்தந்த பகுதியில் நிலவும் வானிலையை கருத்தில்கொண்டு மழையில்லாத சமயங்களில் மருந்து தெளிக்கவும். |

*குறுஞ்செய்தி: மழை: அக்டோபர் 28- நவம்பர் 1 வரை: 8, 10, 19, 25& 25 மி.மீ. மிளகாய்- நாற்றழுகல் நோய்: கார்பன்டசிம் 0.1 சத கரைசலை மண்ணில் ஊற்றவும்.*

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்
கோவில்பட்டி